இன்னும் ஒரு சில தீர்ப்பு கூறாமல் இருக்கிறது" எனக் கூறியதைக் கீழ்க் கண்டவாறு திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

"தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் நகல் இன்னும் அரசுக்கு வரவில்லை".

5. மாண்புமிகு அரிசன நல அமைச்சரது அறிக்கை—உடுக்குறியிட்ட வினா 223-ன் துணை வினாவுக்கான விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, 23—8—1972-ல் கேட்கப்பட்ட துணைக் கேள்விக்கு நான் கூறிய பதிலைத் திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஆறு பிச்சைக்காரர் இல்லங்களுக்கும் சேர்த்து ரூபாய் 51.87 இலட்சம் செலவு ஆகிறது. நான் ஒரு இல்லத்திற்கு மட்டும் ரூபாய் 51.87 இலட்சம் என்று கூறியதை ஆறு இல்லங்களுக்கும் சேர்த்து 51.87 இலட்சம் என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோன்று ஒவ்வொரு இல்லத்திற்கும் 5 இலட்சம் ரூபாய் பராமரிப்புச் செலவு ஆகிறது. ஆறு இல்லங்களுக்கும் 30 இலட்சம் பராமரிப்புச் செலவு ஆகிறது. எனவே ஆறு இல்லங்களுக்கும் 30 இலட்சம் ரூபாய் என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்."

6. ஆளுநர் உரையின் மீது விவாதம்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: ஆளுநர் உரை மீது திரு. காட்டூர் கோபால் அவர்கள் நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

*** திரு. காட்டூர் கோபால்:** தலைவர் அவர்களே,

"1973 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத்தின் கூட்டுப் பேரவையில் உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற்காக, தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநருக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்"

என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் வழிமொழியப்பட்டது.

@1°6-134 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.